---

**வத்தளை – மாபோல நகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் வத்தளை – மாபோல நகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வத்தளை – மாபோல நகர சபையின செயலாற்றுகை தொடர்பான நிலவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அச்செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கழிவு முகாமைத்துவ அதிகாரசபையால் நகர சபைக்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,379,000 பெறுமதியான உழவு இயந்திரமும், இழுவை இயந்திரமும் 2009 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,612,500 பெறுமதியான இரண்டு உழவு இயந்திரங்களும் இழுவை இயந்திரங்களும் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள கையிலுள்ள பொருட்களின் இருப்பின் பெறுமதி ரூபா 384,940 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் இவை ரூபா 3,108,240 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட வேண்டிய எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்ச் செலவினம் ரூபா 598,683 தொகையான போதிலும் கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 694,126 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 95,443 ஆல் செலவினமும் கடன்கொடுத்தோரும் அதிகரித்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) நாட்குறிப்புப் பதிவு இல. 17 இன் மூலம் ‘‘கிராம எழுச்சி’’ ரூபா 5,179,038 தொகையும் மாகாண அபிவிருத்தி மானியம் ரூபா 1,985,380 தொகையான செலவினம் கணக்கீடு செய்யப்படுகையில் முற்கொடுப்பனவுக் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக வருமானத்திற்காக வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

ஐ மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்ட கடன்கொடுத்தோராக ரூபா 25,770,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய தொழில் தொடர்பாக மதிப்பீடு தயாரித்தல், உடன்படிக்கை கைச்சாத்திடப்படல், விலைமனுக் கோரலேனும் மேற்கொள்ளப்பட்டிராதிருக்கையில் தவறாக கடன்கொடுத்தோராகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2013 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 28,925,713 ஆகக் காணப்பட்டது.

#### (ஆ) கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 180,380,822 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 08 கணக்கு விடயங்களுடன் தொடர்புடைய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 62,859,565 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றிற்குரித்தான துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 102,421,672 ஆகக் காணப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 12,908,037 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,914,820 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **வருமான விடயம்** | **மதிப்பீடு** | **உள்ளபடியானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை** |
|---|---|---|---|---|
| | | **ரூபா ‘000** | **ரூபா‘000** | **ரூபா ‘000** |
| (i) | வீதவரியும் வரியும் | 19,203 | 19,667 | 34,489 |
| (ii) | குத்தகை வாடகை | 10,995 | 10,651 | 19,507 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 01 | 1,517 | 1,292 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 151,561 | 29,793 | 14,626 |

### 2.2.2 நிலுவை வருமானம்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 170(i), 170(அ)(i) மற்றும் (2) ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வரி தண்டப்பணம் ஆகியவை அறவிடப்பட்டு சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவது மற்றும் இதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவது செயலாளரின் செயற்பாடான போதிலும் ரூபா 72,612,610 தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

### (அ) ஊழியர் கடன்

12 வருடங்களுக்குக் கூடுதலான காலமாக 105 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 341,834 தொகையான ஊழியர் கடன் அறவிடப்படுவதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) நீர்ப் பட்டியல் தீர்க்கப்படல்

ஹெந்தல, மாபோல வியாபாரக் கட்டிடத் தொகுதி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அங்கு பயன்படுத்தப்படும் நீருக்காக நகர சபையால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு முதல் 2011 சனவரி வரையான தாமதக் கட்டணத்துடன் வெளியார் பயன்படுத்தும் நீருக்காக ரூபா 521,073 தொகை மீளாய்வாண்டின் போது சபை கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. உரிய தரப்பினரிடமிருந்து இந் நீர்ப்பட்டியலை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) ஆயுர் வேத மருந்தகங்களின் பற்றாக்குறை

நகர சபையால் நடாத்தப்பட்டு வரும் சுதந்திரமான ஆயுர் வேத மருந்தகத்தால் மீளாய்வாண்டின் போது 4873 நோயாளிகளுக்காக ரூபா 504,713 தொகையான மருந்துகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் தகைமை உள்ள மருந்து வழங்குனர் அல்லாத ஒருவரால் மருந்துகள் வழங்கப்பட்டிருந்தன.

### (ஈ) ஊழியர் பெயர்ப்பதிவேடு

நகர சபையில் தொழில் பிரிவில் சில ஊழியர்கள் சில நாட்களில் பெயர்ப் பதிவேட்டில் பதிவு செய்யாது அல்லது கையொப்பமிடாது செயற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

2008 யூலை 30 திகதிய 1560/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் iv(அ) ஆம் பிரிவின் நகரத் திண்மக் கழிவு முகாமைத்துவ விதிக் கோவையின் படி சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 செயலாற்றல்**

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம்**

2012 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திட்டமிடப்பட்டிருந்த அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் உறுதிப்படுத்தப்படுவதற்கு தேவையான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறாகும்.

| | | நோக்க அளவு | நோக்கம் எய்தப்பட்ட செயற்பாட்டு அளவு | பூர்த்திசெய்யப்பட்ட செயற்பாட்டு அளவு | இலக்கிடப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்படாத அளவு |
|---|---|---|---|---|---|
| (i) | பொது நிர்வாகம் | 05 | 41 | 23 | 18 |
| (ii) | நிதி முகாமைத்துவம் | 09 | 24 | 19 | 05 |
| (iii) | பொது சுகாதார மற்றும் சுற்றாடல் | 05 | 25 | 24 | 01 |
| (iv) | பௌதீக திட்டங்களும் தொழிலும் | 08 | 32 | 16 | 16 |
| (v) | நூலகம் மற்றும் மக்கள் அபிவிருத்தி | 02 | 10 | 09 | 01 |

(ஆ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கு தொடர்பாக நிதிப் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கை அடைவதிலான முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திட்டத்தின் இலக்குகள் எய்தப்படுவது போன்று முன்னேற்றத்தை ஒப்பிடக்கூடிய வகையில் ஓர் நடவடிக்கை இருக்கவில்லை.

## 2.5 டெங்கு ஒழிப்புச் செயற்திட்டம்

டெங்கு செயற்திட்டத்தின் படி நாளாந்தம் 50 வீடுகள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 2600 வீடுகள் மாத்திரமே பரீட்சிக்கப்பட்டிருந்தன.

இதன் படி பரீட்சிக்கப்பட வேண்டிய வீடுகளில் 75 சதவீதமானவை பரீட்சிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 இருப்புக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் கண்டறியப்படுகின்றன.

(அ) பொருட் கொள்வனவு தொடர்பாக களஞ்சியம் கடன்கொடுத்தோர் கணக்கொன்றை அடிப்படையாகக் கொண்டு கணக்கு வைத்திருக்கவில்லை.

(ஆ) ஆரம்பக் கையிலுள்ள இருப்பு மீதி மீளாய்வாண்டின் செலவினங்களுக்குச் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கையிலுள்ள இருப்புக் கணக்கு நீண்ட காலமாக ஒவ்வொரு ஆண்டின் இறுதி இருப்பு கணக்கீடு செய்யப்படுவது மாத்திரம் மேற்கொள்ளப்படுவதன் மூலம் தொடர்ந்தும் கையிலுள்ள இருப்பாக தவறாக பாரியளவு பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டு வந்துள்ளது.

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு மற்றும் இருப்புக் கணக்கு வைத்தல் தொடர்பாக போதிய கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) மனித வள முகாமைத்துவம்